திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.எஸ்.ஜோசப் ஆரோக்கியராஜ்,

ந.க.எண் : 629/2016/ஊ.வ.1 நாள் : 30.06.2017.

பொருள் : நேரடி நியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2013 -2014 மற்றும் 2014-2015 - தட்டச்சர் பதவிக்கு தேர்வுசெய்யப்பட்டவர்கள் பணியேற்றது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்:1000/PSD-A/2016 நாள்: 14.01.2016.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண். 629/2016/ ஊ.வ.1 நாள்:26.02.2016.
3. தனியர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

**********

2794
20717

**ஆணை :**

பார்வை 1 இல் காணும் கடிதம் வாயிலாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2013-2014 மற்றும் 2014-2015 ஆண்டுக்கான தட்டச்சர் பதவிக்கான தொகுதி IV போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்று, திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 தட்டச்சர்களின் ஏற்பளிக்கப்பட்டோர் பட்டியல் பெறப்பட்டது.

அவர்களுக்கு பார்வை 2 இல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. பணிநியமன ஆணை வழங்கப்பட்ட 2 நபர்கள் கீழ்க்காணும் விபரப்படி அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் இம்மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தட்டச்சர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் அலுவலகம் (திருவாளர்கள்) | தட்டச்சராகப் பணியேற்றுக் கொண்ட நாள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | பி.பிரியா,<br>தட்டச்சர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>வடமதுரை. | 02.03.2016 மு.ப |
| 2 | பி.விஜயலட்சுமி,<br>தட்டச்சர்,<br>உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)<br>அலுவலகம், திண்டுக்கல். | 04.03.2016 மு.ப |

Scanned by CamScanner

மேற்காணும் 2 தட்டச்சர்களுக்கும் கலம் எண் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் தட்டச்சராக பணியேற்ற நாள் முதல் பார்வை 1 இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நியமனம் முற்றிலும் தற்காலிகமானதாகும்.

2. "The regularization is subject to the outcome of the Writ Petitions pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2013-2014 and 2014-2015 recruitment"

3. பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு தொடர் பணிக்காலம் தகுதிகாண் பருவக்காலமாக கருதப்படும்.

4. தகுதிகாண் பருவக்காலத்திற்குள் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான அனைத்துத்துறை தேர்வுகளையும் முடித்திட வேண்டும்.

5. மேலும், தொழில் நுட்ப கல்வி இயக்ககம் நடத்தும் "Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

6. தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கான தகுதிகளை 5 ஆண்டுகளுக்குள் பெறவில்லையெனில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

தனியர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்யும் போது மேலே கண்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென தொடர்புடைய அலுவலகத் தலைமையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

பெறுநர் :-

தொடர்புடையோர் (உரிய வழிமுறையாக)

நகல் :- 1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திண்டுக்கல்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், வடமதுரை.
3. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு.

ந.க.எண்: 2146/2017/அ2,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், திண்டுக்கல்.
நாள்: .07.2017

— நகல் சார்வு செய்யப்படுகிறது —

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
திண்டுக்கல்.

பெறுநர்,
திருமதி. ப. ஜெயலெட்சுமி,
திட்டம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
திண்டுக்கல்.

Scanned by CamScanner